2 DEC 2016

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## நான்காம் வருட/இரண்டாம் அரையாண்டுக் கலைமாணித் தேர்வு – 2013/2014
## (மார்ச் 2016)

## EDUS 4203 கலைத்திட்ட கொள்கைகளும் செயன்முறையும்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

விரும்பிய ஏதாவது நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

01.(அ)கலைத்திட்டம் பற்றி பல்வேறு கல்வியியலாளர்கள் கூறிய கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு நடைமுறையிலுள்ள பாடசாலைக் கலைத்திட்டம் பற்றிய உமது கருத்துக்களை முன்வைக்குக.

(08 புள்ளிகள்)

(ஆ)கலைத்திட்டமொன்றின் உருவ அமைப்பாக்கம், வடிவமைப்பு பற்றி றிப்பு (1994) என்பவர் கலைத்திட்டம் பற்றி கூறிய கருத்துக்களை முன்வைத்து விளக்குக.

(08 புள்ளிகள்)

(இ) "எத்தகைய கலைத்திட்டமும் நிலைகொண்டு நீண்டகாலம் நீடிப்பதில்லை. சில காலத்தின் பின்பு வலுவிழந்து போகின்றன." தற்கால கலைத்திட்டத்தின் அமைப்பாக்கத்தின் அடிப்படையில் இக்கூற்றை வியாக்கியானம் செய்க.

(09 புள்ளிகள்)

02.(அ)"நாட்டின் அனைத்து பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்தப்படும் கலைத்திட்ட செயற்பாடுகள் வினைத்திறனான முறையில் நடைமுறைப்படுத்துவதன்மூலம் நாட்டின் தேசிய இலக்கு அடையப்படுகின்றன." இக்கூற்று தற்கால பாடசாலைக் கலைத்திட்ட செயற்பாட்டில் எவ்வளவு தூரம் உண்மையாகும் என்பதுபற்றிய தெளிவான விளக்கத்தைத் தருக.

(15 புள்ளிகள்)

(ஆ)"ஒரு சமுதாயத்தின் எதிர்பார்ப்பு, பாடசாலையின் இலக்கினால் கலைத்திட்ட செயற்பாட்டினூடாக நடைமுறைப்படுத்தப்படும்." இச் செயற்பாடு வினைத்திறனான முறையில் அமைய வேண்டுமாயின் ஆசிரியர் ஒழுங்கமைக்க வேண்டிய நடைமுறைச் செயற்பாடுகளைப்பற்றி விளக்குக.

(10 புள்ளிகள்)

03.(அ)ரெயிலரின் கலைத்திட்ட மாதிரி நான்கு படிகளுக்கூடாக செயற்படுத்தப்படினும் இறுதிப்படியான மதிப்பீடு பற்றிய குறைபாடு இம்மாதிரியை குறைத்து மட்டிடுகின்றது. இக்குறைபாட்டின் மூன்று நிலைகளை எடுத்து விளக்குக.

(3x3=9 புள்ளிகள்)

(ஆ)டெனிஸ் லோட்டனின் கலைத்திட்ட மாதிரியில் கற்றலுக்கான பகுதியை தெரிவுசெய்வதில் உளவியற் காரணிகள் எத்தகைய பங்கினை வகிக்கின்றதென்பதை சுருக்கமாக விளக்குக.

(07 புள்ளிகள்)

(இ)வீலரின் கலைத்திட்ட மாதிரியின் இயக்க செய்றபாட்டில் "கற்றல் அனுபவங்களையும் பாட உள்ளடக்கத்தையும் ஒழுங்கமைத்தல்" செயற்பாட்டில் இன்றைய ஆசிரியர்கள் எவ்வளவுதூரம் வினைத்திறனாக செயற்படுகின்றனர் என்பதை சுருக்கமாக விளக்குக.

(09 புள்ளிகள்)

04.(அ)பாடசாலையில் நடைமுறைப்படுத்தப்படும் கலைத்திட்ட அமைப்பானது வினைத்திறனான முறையில் செயற்பட நான்கு மூலாதாரங்கள் அடிப்படையாக அமைகின்றன. இது பற்றிய உமது விளக்கத்தை சுருக்கமாக முன்வைக்குக.

(05 புள்ளிகள்)

(ஆ)கலைத்திட்டத்தை தயாரிக்கும்போது கவனிக்க வேண்டிய முக்கியமான ஐந்து அம்சங்களை முன்வைத்து சுருக்கமாக விளக்குக.

(5x2=10 புள்ளிகள்)

(இ)பாடசாலை அதிபர் கலைத்திட்ட அமுலாக்கம் பற்றிய சிறப்பான தலைமைத்துவ தீர்மானங்களை எடுப்பதற்கு ஆற்ற வேண்டிய கடமைக்கூறுகள் ஐந்தினை பட்டியலிடுக.

(5x2=10 புள்ளிகள்)

05.(அ)கலைத்திட்ட அமுலாக்கலில் பாட இணைப்பாளரின் முக்கிய பொறுப்புக்கள் பத்தினை பட்டியலிடுக.

(1x10=10 புள்ளிகள்)

(ஆ)கலைத்திட்ட அமுலாக்கலில் ஆசிரியர் தொடர்பான பிரச்சினைகளை சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

(இ)" 1 AB பாடசாலை ஒன்றின் கட்டமைப்பில் பிரதியதிபர் I, பிரதியதிபர் II ஆகியோரின் ஒன்றிணைந்த செயற்பாட்டினூடாகவே கலைத்திட்ட அமுலாக்கம் சிறப்பாகவும் வினைத்திறனாகவும் அமையும்." இன்றைய பாடசாலைகளின் செயற்பாட்டில் இது எவ்வளவுதூரம் வினைத்திறனுடையதாகின்றதென்பதை விளக்குக.

(10 புள்ளிகள்)

06.(அ)மனிதனின் இயற்கையான வளர்ச்சி படிநிலைகளை அடியொற்றி கல்வி வழங்குவதற்குரிய கலைத்திட்ட ஒழுங்கமைப்பை ரூசோ வலியுறுத்தினார். இவர் கூறிய கலைத்திட்ட படிநிலை ஒழுங்கமைப்பினை சுருக்கமாக விளக்குக.

(13 புள்ளிகள்)

(ஆ)''ஜோண்டுயியின் பயன்கொள்வாத கலைத்திட்டமானது மாணவர்களின் செயலூக்கமுள்ள செயற்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்குகின்றது.'' இக்கூற்றினை முன்னிலைப்படுத்த உமது கருத்துக்களை முன்வைத்து விளக்குக.

(12 புள்ளிகள்)

*****